
தேர்வு
அணுகுமுறை




# எஸ்.பி.எம். தமிழ் இலக்கியம்

## ந.பச்சைபாலன்

### வாடா மலர் நாவல்

குழந்தைவேல், தானப்பன் ஆகிய இருவரின் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை மையமிட்டு டாக்டர் மு.வரதராசன் படைத்த நாவல் வாடா மலர். தாயின் மறைவுக்குப் பின், சித்தியின் கொடுமைக்கு ஆளாகியதால் தானப்பனின் வாழ்க்கை திசை மாறிப் போகிறது. திரு.வி.க.வின் உரையைக் கேட்டும் நூல்களைப் படித்தும் அவன் மனமாற்றம் பெறுகிறான். ஆயினும், மனைவி கனகம் பாலில் விஷத்தைக் கலந்ததால் அவளோடு மரணமடைகிறான். அன்பான பெற்றோர்கள் அமைந்தும் தன் மனைவியின் முரண்பட்ட போக்கால் குழந்தைவேல் வேதனை அடைகிறான். குழந்தைவேலின் பெற்றோர் அன்பால் அவன் மனைவி பூங்கொடி மனந்திருந்துகிறாள்.

தேர்வு நோக்கில் மாணவர்கள் பின்வரும் கூறுகளில் கவனம் செலுத்த வேண்டும்: கதைச் சுருக்கம், கதைப்பாத்திரங்கள், கருப்பொருள், துணைக்கருப்பொருள்கள், கதைப்பின்னணி, கதைப்பின்னல், உத்திகள், மொழிநடை, படிப்பினை, தாக்கம்.

### டாக்டர் மு.வரதராசன்

| | |
|---|---|
| இயற்பெயர் | மு.திருவேங்கடம் |
| பெற்ற விருது | சாகித்திய அகாடெமி, சென்னை அரசு விருது, தமிழ் வளர்ச்சிக் கழக விருது |
| எழுத்துக் கொள்கை | சமுதாயச் சீர்திருத்தம் |
| பணியாற்றிய கல்லூரி | சென்னை பச்சையப்பன் கல்லூரி |
| பணியாற்றிய பல்கலைக்கழகம் | சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் |
| உயர் பதவி | காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் |
| நாவல்கள் எ.கா. | அல்லி, கரித்துண்டு, மண்குடிசை, அகல் விளக்கு |
| எழுத்துப் பணி | நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், கடித இலக்கியம் |
| மொழிபெயர்க்கப்பட்ட நாவல்கள். எ.கா. | அகல் விளக்கு (ரஷ்ய மொழி) கள்ளோ? காவியமோ? (மலாய் மொழி) |

## கதைச்சுருக்கம் / கதைப்பின்னல்

கதைப்பின்னல், தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சம், சிக்கல் அவிழ்ப்பு, முடிவு என 6 கூறுகளைக் கொண்டது. இதன்வழியே நாம் நாவலில் கதைச் சுருக்கத்தை அறியலாம்.

| | |
|---|---|
| தொடக்கம் | குழந்தைவேலும் தானப்பனும் நட்பு கொள்ளல்<br>சித்தியின் கொடுமை<br>குழந்தைவேல் குடும்பத்தினர் ஆதரவு |
| வளர்ச்சி | தானப்பன் சென்னைக்கு ஓடித் தலைமறைவாகிறான்<br>நண்பன் பிரிவால் குழந்தைவேல் ஏக்கம் கொள்கிறான்.<br>தானப்பன் கடிதம் எழுதுகிறான் (22 மாதங்களுக்குப் பின்)<br>தானப்பனைச் சென்னை உணவுக்கடைகளில் தேடுகிறான்.<br>முருகய்யாவுக்கும் சுடர்விழிக்கும் திருமணம்.<br>குழந்தைவேலுக்கும் பூங்கொடிக்கும் திருமணம்.<br>அப்பாவின் மறைவுக்குப் பின் தானப்பன் நகைக்கடையைத் தன் வசமாக்குகிறான். |
| சிக்கல் | தானப்பன் சித்தி வக்கீல் நோட்டீஸ் அனுப்புகிறார்.<br>நகர்மன்றத் தேர்தலில் தானப்பன் வெற்றி பெறுகிறான்.<br>கனகத்தை மணமுடிக்கிறான். புலால் உணவுக்கடை திறக்கிறான். பேருந்து நிறுவனம் தொடங்கிறான்.<br><br>பூங்கொடி, குழந்தைவேல் தனிக்குடித்தனம் போகின்றனர்.<br>திரு.வி.க. சொற்பொழிவு கேட்டு தானப்பன் மனமாற்றம் பெறுகிறான்.<br>மனைவியின் போக்கு பிடிக்காமல் மணவிலக்கு பெறுகிறான்.<br>அவள் திருந்தினால் ஏற்பதாக உறுதிமொழி வழங்குகிறான். |
| உச்சம் | பூங்கொடி தனிக்குடித்தனம் தவிர்த்து ஒரே குடும்பமாக வாழச் சம்மதிக்கிறாள்.<br>கனகம் பலமுறை கடிதம் எழுதி மன்னிக்கும்படி வேண்டுகிறாள். தானப்பன் மறுக்க, பாலில் விஷம் கலக்கிறாள். தானப்பன், கனகம் மரணம். |
| சிக்கல் அவிழ்ப்பு | மரணம் குறித்து போலீசார் விசாரணை.<br>கனகம் தானப்பனுக்கு எழுதிய கடிதங்களைப் படித்துக் குழந்தைவேல் நடந்ததை அறிகிறான். |
| முடிவு | முருகையாவும் குழந்தைவேலும் இறுதிக் காரியங்களைச் செய்தல்.<br>தானப்பன் வாங்கிய நிலத்தில் முருகையா பள்ளிக்கூடம் கட்டி 'வாடா மலர்' எனப் பெயரிடுகிறார்.<br>சித்தியின் மகள் மனோன்மணியின் திருமணம் அங்கு நடக்கிறது. |

| | |
|---|---|
| கருப்பொருள் | நல்வாழ்வுக்கு அன்பே ஆதாரம் |
| துணைக் கருப்பொருள்கள் | 1. நலம் தரும் எளிய வாழ்வு<br>2. வாழ்வை நெறிப்படுத்தும் அறநூல்கள்<br>3. பயன்தரும் அறப்பணிகள்<br>4. நல்ல நட்பைப் போற்றுதல்<br>5. இல்வாழ்வைப் பாதிக்கும் தவறான பழக்கம்<br>6. இல்வாழ்வுக்குத் தேவை நல்லிணக்கம்<br>7. இல்லற வாழ்வில் புரிந்துணர்வு |
| நோக்குநிலை | தன்மைநோக்கு நிலை / அகநோக்குநிலை |
| கதைப்பின்னணி | இடம் - சென்னை, கடலூர், தானப்பனின் பெற்றோர் வீடு, வாடா மலர் கட்டடம்,<br>சென்னைக் கல்லூரி, முருகையா வீடு, அருட்பா மன்றம்<br>காலம் – திரு. வி.க. தமிழகத்தில் வாழ்ந்த காலம் |

| | |
|---|---|
| | சமுதாயம் – மேல்தட்டு வர்க்கம் – பூங்கொடி, கனகம்<br>நடுத்தர வர்க்கம் – தானப்பன், குழந்தைவேல்<br>கீழ்த்தட்டு வர்க்கம் – தானப்பன் வீட்டுச் சமையலாள், தோட்டக்காரர், அவர் மனைவி |

**உத்திகள்** - கதைகூறல் உத்தி, உரையாடல் உத்தி, சொற்பொழிவு உத்தி, நனவோடை உத்தி, கடித உத்தி

**மொழிநடை** – இலக்கிய நடை, பேச்சு நடை, வருணனை, வசைமொழி

**கதைப்பாத்திரங்கள்**
முதன்மைக் கதைப்பாத்திரம் – குழந்தைவேல்
(ஒவ்வோராண்டும் கதைப்பாத்திரம் பற்றிய வினாக்கள் தேர்வில் இடம்பெறுகின்றன. எனவே, முதன்மைக் கதைப்பாத்திரம், துணைக் கதைப்பாத்திரங்கள் பற்றிய பண்புக்கூறுகளை அறியுங்கள்)

## பாகம் 1 - 10 நிமிடம் (15 புள்ளி)

மூன்று வினாக்கள் கேட்கப்படும். வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுத வேண்டும்.

வினா 1. நாவலாசிரியர் தொடர்பான வினா வினவப்படும்.
வினா 2. நாவல் தொடர்பான (இலக்கியக் கூறுகள்) 2 வினாக்கள் வினவப்படும்.
வினா 3. நாவலில் இடம்பெற்ற சூழல் பகுதி கொடுக்கப்பட்டு 4 துணை வினாக்கள் வினவப்படும்.

- (i) சூழலில் இடம்பெற்றவரின் பண்புக்கூறு?
- (ii) உத்தி / மொழிநடை / படிப்பினை / இடப்பின்னணி
- (iii) சூழலில் இடம்பெறும் சொல் / சொற்றொடர்க்கான பொருள்?
- (iv) சூழல் வெளிப்படுவதற்கான காரணம்?

## மாதிரி வினா

1. வாடா மலர் நாவலாசிரியரின் இயற்பெயரைக் குறிப்பிடுக. ( 2 புள்ளி)

2. (i) வாடா மலர் நாவலின் **நோக்கு நிலை யாது**? ( 2 புள்ளி )

(i) வாடா மலர் நாவலின் **உத்திகளுள் ஒன்றனைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

3. கீழ்க்காணும் சூழலை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை தருக.

"மாதச் சம்பளம் தரவில்லையா? ஏன் இலாபத்தில் பங்கு கேட்டாய்?"

"பங்கு கேட்கவில்லை. அவனாலேதான் நான் **வெளியூருக்குப் போக நேர்ந்தது**. பதினெட்டு மாதம் அவனால்தான் அங்கே இருந்தேன். சாப்பாட்டுக்கும் துணிக்கும் இடத்துக்கும் மட்டும் ஏற்பாடு இருந்தது. திரும்பி வந்ததும் பணம் கேட்டேன். உன்னால்தானே அங்கே இருந்தேன். அதனால் பதினெட்டு மாதச் சம்பளமும் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். பாதிச் சம்பளமாவது போட்டுத் தர வேண்டும் என்று கேட்டேன். முடியாது என்று சொல்லி வேலையிலிருந்து நீக்கிவிட்டான். பொல்லாத மோசக்கார உலகம். நம்பினவர்களைக் கழுத்தறுக்கும் கூட்டம். உயிருக்கு உயிராகப் பேசுவார்கள். அப்புறம் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். நாமும் பொல்லாதவர்களாக ஆனால்தான் இந்த உலகத்தில் வாழ முடியும். இல்லையானால் ஓட ஓடத் துரத்துவார்கள்."

(வாடா மலர், அத்தியாயம் 15, ப. 108)

(i) இச்சூழலில் வெளிப்படும் தானப்பனின் **பண்புக்கூறுகள்** இரண்டனைக் குறிப்பிடுக.
(2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

(ii) **'வெளியூருக்குப் போக நேர்ந்தது'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது?
(2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 புள்ளி)

(15 புள்ளி )

**விடைகள்**

1. மு.திருவேங்கடம்

2. (i) அகநோக்கு நிலை

(ii) கடித உத்தி

3. (i) நம்பியவர்களால் ஏமாற்றமடைந்தவன், மனிதர்களோடு பழகுவதில் எச்சரிக்கை உணர்வுள்ளவன்.

(ii)) சென்னையில் குழந்தைவேல் படித்த கல்லூரி விடுதி

(iii) தானப்பன் தன் முதலாளியால் ஏமாற்றப்பட்டு பதினெட்டு மாதங்கள் சிறைவாசம் பெற்றதை மறைத்து 'வெளியூருக்குப் போக நேர்ந்தது' எனக் குழந்தைவேலிடம் கூறுகிறான்.

(iv) குழந்தைவேல் கல்லூரிக்குச் சென்று முதல்வரிடம் நற்சான்றும் விடுகைத்தாளும் பெற்றுக்கொண்டு ரயில் நிலையம் போகிறான். அங்குத் தற்செயலாகத் தானப்பனைச் சந்திக்கிறான். அவனை அழைத்துக்கொண்டு கல்லூரி விடுதிக்கு வருகிறான் குழந்தைவேல். முதலாளியால் ஏமாற்றப்பட்டு தான் தற்பொழுது வேலை தேடுவதாகத் தானப்பன் கூறுகிறான்.

## பாகம் 2 - கட்டுரை (40 நிமிடம்)

## இவ்வாண்டின் எதிர்பார்ப்பு

| | வினாக்கள் |
|---|---|
| 1 | வாடா மலர் நாவலின் கதைச் சுருக்கத்தை எழுதுக. |
| 2 | வாடா மலர் நாவலின் கதைப்பின்னலை எழுதுக. |
| 3 | குழந்தைவேலின் பாத்திரப்படைப்பை / பண்புநலனை ஆராய்க<br>குழந்தைவேலின் வழி நாம் பெறும் படிப்பினைகள் |
| 4 | தானப்பனின் பாத்திரப்படைப்பை / பண்புநலனை ஆராய்க.<br>தானப்பன் வழி நாம் பெறும் படிப்பினைகள் |
| 5 | தானப்பன், குழந்தைவேல் ஆகிய இருவரையும் ஒப்பிடுக |
| 6 | தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் அவர்கள் சித்தி இழைத்த கொடுமைகளை விளக்கி எழுதுக. |
| 7 | தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் குழந்தைவேல் குடும்பத்தினர் காட்டிய அன்பினை விளக்கி எழுதுக. |
| 8 | தானப்பன் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களைப் பற்றி விளக்கி எழுதுக. |
| 9 | வாடா மலர் நாவலில் காணும் துணைக்கருப்பொருள்களை ஆராய்க. |

| | |
|---|---|
| 10 | முருகய்யாவின் பாத்திரப் படைப்பை / பண்பு நலனை ஆராய்க. |
| 11 | சுடர்விழியின் பாத்திரப் படைப்பை / பண்பு நலனை ஆராய்க. |
| 12 | முருகய்யா, சுடர்விழி ஆகியோர் எளிமையான வாழ்வுக்கு முன்மாதிரியானவர்கள். விளக்குக. |
| 13 | மோகனாவின் பாத்திரப் படைப்பை / பண்புநலனை ஆராய்க. |
| 14 | பூங்கொடியின் பாத்திரப்படைப்பை / பண்புநலனை ஆராய்க. |
| 15 | கனகத்தின் பாத்திரப்படைப்பை / பண்புநலனை ஆராய்க. |
| 16 | வாடா மலர் நாவலின் பெண் கதைப்பாத்திரங்கள் மூலம் பெறும் படிப்பினைகள் |
| 17 | வாடா மலர் நாவலில் காணும் படிப்பினைகளை விளக்கி எழுதுக. |
| 18 | வாடா மலர் நாவலில் காணும் உத்திகளை விளக்கி எழுதுக. |
| 19 | வாடா மலர் நாவலில் கதைப்பின்னணியை (இடம், காலம், சமுதாயம்) விளக்கி எழுதுக. |
| 20 | வாடா மலர் நாவல் உமக்குள் ஏற்படுத்திய தாக்கங்களை விளக்கி எழுதுக. |
| 21 | வாடா மலர் நாவல் மூலம் டாக்டர் மு.வ. எழுப்பும் சமுதாயச் சிக்கல்களை விளக்குக. |
| 22 | வாடா மலர் நாவலின் மொழிநடையை ஆராய்க. |
| 23 | வாடா மலர் சிறந்த நாவல். விளக்கி எழுதுக. |

**முன்னுரை எப்படி எழுதுவது?**
(குழந்தைவேல் பாத்திரப்படைப்பு)

வாடா மலர் நாவல் டாக்டர் மு.வரதராசனின் கற்பனையில் உருவான படைப்பாகும். நல்வாழ்வுக்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளில் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. இதில் வலம் வரும் குழந்தைவேல் முதன்மைக் கதைப்பாத்திரமாகத் திகழ்கிறான்.

**முடிவுரை எப்படி எழுதுவது?**
(குழந்தைவேல் பாத்திரப் படைப்பு)

நல்ல பண்புகளின் உறைவிடமாகத் திகழும் குழந்தைவேல் சீரான வாழ்வை மேற்கொண்டான். பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் சிக்கிக்கொள்ளாமல் அமைதி வாழ்வில் மகிழ்ச்சி அடைந்தான். அவனின் இணக்கப்போக்கால் இல்வாழ்விலும் அமைதி நிலவியது.

**கட்டுரையில் ஒரு  கருத்தை எப்படி விளக்கி எழுதுவது?**

**தானப்பனின் பண்புநலனை விளக்கி எழுதுக.**

**எ.கா.**
**சமுதாய மதிப்புக்கு ஏங்கியவன்**

**கருத்து**

சமுதாய மதிப்புக்கு ஏங்கும் மனிதனாக தானப்பன் படைக்கப்பட்டுள்ளான். பணம், பதவி மூலம் அதை அடையலாம் என்று எண்ணுகிறான். சென்னைக்கு ஓடிப்போய் தலைமறைவாக வாழும் தானப்பன் உணவுக்கடையில் பணிக்குச் சேர்ந்து தன் அறிவாலும் திறமையாலும் முதலாளியின் அடுத்த நிலைக்கு உயர்கிறான். சட்டவிரோதத் தொழிலுக்கு முதலாளி அவனைப் பயன்படுத்திக்கொள்கிறார். இதனால் தானப்பன் பதினெட்டு மாதச் சிறைத்தண்டனை பெறுகிறான். முதலாளியால் ஏமாற்றப்பட்டு வேலை இழந்து தவிக்கும் தானப்பன் எப்படியாவது சமுதாயத்தில் மதிக்கும் ஒருவனாக உயர வேண்டும் என்ற தன்முனைப்பைப் பெறுகிறான். அப்பாவின் மறைவுக்குப் பிறகு ஊர் திரும்பும் தானப்பன், நகர மன்றத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுகிறான். உணவுக்கடை, பேருந்து நிறுவனம் தொடங்குகிறான். இவற்றின் மூலம் தானப்பன் சமுதாய மதிப்புக்கு ஏங்கியது தெளிவாகத் தெரிகிறது .

**சான்று**

**கருத்தை மீண்டும் வலியுறுத்தல்**

**மாதிரி வினாக்கள்**

1. **வாடா மலர் நாவலில்  தானப்பன், சுடர்விழி ஆகியோருக்குக் குழந்தைவேல் குடும்பத்தினர் காட்டிய அன்பினை விளக்கி எழுதுக.   (20 புள்ளி)**

அ) இருவருக்கும் உணவு தந்து அரவணைக்கின்றனர். (சித்தி மகப்பேறு சென்ற சமயம், தானப்பன் பசியால் மயக்கம் அடைந்தபோது)
ஆ) நீண்ட கத்திரிக்காய்கள் வாங்கியதற்காக சித்தி தானப்பனைத் திட்டுகிறார். குழந்தைவேல் தன் அம்மாவையே அந்தக் காய்களை வாங்கச் செய்கிறான்.
இ) தானப்பனைச் சித்தி அறையில் பூட்டிவைத்ததை அறிந்து குழந்தைவேலின் அப்பா, தானப்பனின் அப்பாவைக் கண்டிக்க எண்ணுகிறார். இதனால் இரு குடும்பங்களின் உறவு பாதிப்படைந்து தானப்பனுக்குத்தான் பாதிப்பு வரும் என்று குழந்தைவேல் அம்மா தடுக்கிறார்.
ஈ) சுடர்விழிக்குக் குழந்தை பிறந்தபோது, குழந்தைவேல் அம்மா சுடர்விழி வீடு சென்று உடனிருந்து உதவுகிறார்.
உ) தானப்பனுக்கும் அவன் மனைவிக்கும் தங்கள் வீட்டில் திருமண விருந்தை நடத்துகின்றனர்.

2. **தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் அவர்களின் சித்தி இழைத்த கொடுமைகளை விளக்கி எழுதுக. (10 / 20 புள்ளி)**

அ) இருவரும் சித்தியால் கல்வியை இழந்தனர்.
ஆ) உணவு தராமல் பட்டினி (தானப்பன் பசியால் மயக்கம் அடைகிறான்)
இ) சிறு தவற்றுக்கும் கடுமையான தண்டனை தந்தார்

ஈ) வேலைக்காரர்களாக நடத்தினார்.
உ) நல்ல கவனிப்பு இல்லை (உடை)

**3. குழந்தைவேல், தானப்பன் ஆகிய இருவரையும் ஒப்பிடுக. (20 புள்ளி)**

| குழந்தைவேல் | தானப்பன் |
|---|---|
| நடுத்தர குடும்பப் பின்னணி (அப்பா சிமெண்டு வியாபாரம்) | நடுத்தர குடும்பப் பின்னணி (அப்பா நகைக்கடை) |
| பெற்றோரின் அன்பைப் பெற்றவன் | பெற்றோரின் அன்பை இழந்தவன் |
| நட்பைப் போற்றுபவன் | நட்பைப் போற்றுபவன் |
| கல்வியைப் பெற்றான் | கல்வியை இழந்தான் |
| வாழும் வாழ்வில் நிறைவைக் கண்டான் | சமுதாய மதிப்புக்கு ஏங்கினான் |
| மனைவியால் மனத்துன்பம் | மனைவியால் மனத்துன்பம் |
| மனைவியோடு நல்லிணக்கத்தால் அமைதி வாழ்வு அமைந்தது | மனைவியோடு முரண்பட்டதால் நல்வாழ்வை இழந்தான் |

**4. வாடா மலர் நாவலில் காணும் மூன்று உத்திகளை விளக்கி எழுதுக.**
**(10 புள்ளி)**

(3 உத்திகள்)
சொற்பொழிவு / உரை உத்தி
கடித உத்தி
முன்னோக்கு உத்தி

மாதிரி விடை

சொற்பொழிவு மூலமாக நாவலாசிரியர் கூற வரும் கருத்துகளை விரைந்து வாசகர் மனங்களுக்குக் கடத்த முடியும். வாடா மாலர் நாவலில் ‘அறநெறி’ எனும் தலைப்பில் திரு.வி.க. ஆற்றும் சொற்பொழிவை முருகய்யா, குழந்தைவேல், தானப்பன் ஆகிய மூவரும் கேட்கின்றனர். திரு.வி.க. உலக வரலாற்றிலிருந்தும் அறிஞர்களின் நூல்களிலிருந்தும் பல சான்றுகளை எடுத்துக்காட்டி இரண்டு மணி நேரத்திற்கு மேல் உரையாற்றுகிறார். அவர் தமதுரையில், மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் தீய குணங்களை நீக்கி அன்பை விதைத்தால் சமுதாயம் சீராகும் என்று வலியுறுத்துகிறார். மேலும், அன்பை விதைத்தால் கொடிய மிருகங்கள் வாழும் காட்டு வாழ்க்கை, நாட்டு வாழ்க்கையிலும் இல்லாமல் போகும் என்கிறார். இந்தச் சொற்பொழிவு பின்னாளில் தானப்பன் வாழ்வின் மாற்றத்திற்கு வழிகோலியது.

கடித உத்தி மூலமாக தானப்பன், கனகம் ஆகிய இருவரிடயே நிகழ்ந்த மனப்போராட்டங்களை டாக்டர் மு.வ. விளக்குகிறார். தானப்பன், கனகம் ஆகிய இருவரின் இறப்புக்குப்பின் கனகம் தானப்பனுக்கு எழுதிய ஏழு கடிதங்களைக் குழந்தைவேல் படித்துப் பார்க்கிறான். அந்தக் கடிதங்கள்வழி, அவர்கள் இருவரிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைக் குழந்தைவேல் அறிந்து கொள்கிறான். தான் செய்த தவறுகளை மன்னித்து ஏற்கும்படி கனகம் பலமுறை கெஞ்சிக் கேட்டதை அறிய முடிகிறது. மணமுறிவுக்குப் பின் மனம் மாறி வாழவேண்டும் என விரும்பினால் மீண்டும் ஏற்றுக்கொள்வதாக வாக்களித்ததை நினைவூட்டி, இனித் தானப்பனுக்கு உதவியாக, துணையாக இருப்பதில் உறுதி என எழுதியதும் இருந்தது. ஆனால், தானப்பன் அவளை ஏற்க மறுத்ததால் தன் முயற்சியில் தோல்வி கண்டு மனமுடைந்து கனகம் எழுதியதையும் குழந்தைவேல் அறிகிறான்.

எதிர்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்வை முன்கூட்டியே குறிப்பால் உணர்த்துவது முன்னோக்கு உத்தியாகும். வச்சிரநாதனுடன் நெருங்கிப் பழகும் தன் மனைவியைப் பற்றி அறிந்தால் தானப்பன் என்ன செய்வானோ என்று குழந்தைவேல் கவலை அடைகிறான். தானப்பன் தன் மனைவியோடு போராடி அவளைக் கொன்று விட்டதாக குழந்தைவேல் ஒருநாள் கனவு கண்டு அலறி எழுகிறான்; வீணான கற்பனைகள் கூடாது எனத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான். கனகத்தின் தவறான போக்கால் பின்னாளில் தானப்பன், கனகம் வாழ்வில் மோசமான விளைவுகள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே இஃது உணர்த்துவதாக இக்கனவு வருகிறது.

**5. வாடா மலர் நாவலில் காணும் படிப்பினைகளை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

பிறர் மீது அன்பு காட்ட வேண்டும்
எளிமையைப் போற்றி வாழ வேண்டும்
அறநூல்கள் வாசித்து வாழ்வை நெறிப்படுத்த வேண்டும்
அறப்பணிகளில் ஈடுபட வேண்டும்
நட்பைப் போற்றி வாழ வேண்டும்

**6. குழந்தைவேலின் பண்புநலனை ஆராய்க. (20 புள்ளி)**

பெற்றோரைப் போற்றுபவன்
நட்பைப் போற்றுபவன்
மனைவியிடம் நல்லிணக்கத்தைப் பேணுபவன்
மற்றவருக்கு உதவும் மனதுடையவன்
அரசியலில் நாட்டமில்லாதவன்

**7. தானப்பனின் பாத்திரப்படைப்பை ஆராய்க. (20 புள்ளி)**

சித்தியின் கொடுமைக்கு ஆளானவன்
சமுதாய மதிப்புக்கு ஏங்கியவன்
அறநூல்களால் மனமாற்றம் பெற்றவன்
உடன்பிறப்புகளின் நலனில் அக்கறையுள்ளவன்
போராட்டங்களைத் துணிவுடன் எதிர்கொள்பவன்

**8. வாடா மலர் நாவலில் பூங்கொடியின் பண்புநலனை ஆராய்க. (20 புள்ளி)**

பொறுப்பில்லாதவள்
புகுந்த வீட்டின் அன்பை உணராதவள்
பிடிவாத குணம் உள்ளவள்
தாய்வீட்டின் மீது அதிக அன்பு கொண்டவள்
தன் தவற்றுக்கு வருந்துபவள்

**நினைவூட்டல்**

**‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்’** என்கிறார் ஔவையார். படித்த பாடங்களை மீண்டும் படித்து நினைவுகூர்தலே தேர்வில் சிறந்த தேர்ச்சிபெற வழிவகுக்கும். அதோடு, மாதிரி வினாக்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது தேர்வை எதிர்கொள்ள நம்பிக்கையைத் தரும். விடாது முயலுங்கள். வெல்லுங்கள். வாழ்த்துகள்.